**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 115/2019**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ரசூல் பீவி **DW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.04.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ரசூல் பீவி | | | |
| Father /Husband Name | : முகமது இலியாஸ் | Court | : | |
| Village | : கிளியனூர் | Taluk | : | |
| Calling | : | | | |
| Age | : 48/2025 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

அப்துல் வாஹீப் பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகளின் அசல் (எண்ணிக்கை –10) **பி.வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.09.1980 தேதியிட்ட அப்துல் வாஹீப் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.10.1980 தேதியிட்ட அப்துல் வாஹீப் பெயரில் உள்ள கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.04.2018 தேதியிட்ட தரங்கம்பாடி மண்டல துணை வட்டாட்சியர் கொடுத்த அறிவிப்பின் அசல் **பி.வா.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2003 தேதியிட்ட 3 ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி 4 ம் பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பி.வா.சா.ஆ. 7 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. 25.05.2003 தேதியிட்ட 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **பி.வா.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மயிலாடுதுறை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 114/2018 ன் வழக்குரையின் சார்வு செய்யப்பட்ட நகல் **பி.வா.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.02.1930 தேதியிட்ட தாவூத் ஷா என்பவருக்கு அப்துல் வகாப் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மயிலாடுதுறை பொது தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களால் அப்துல் ஹாதிக்கு அனுப்பிய கடிதத்தின் அசல் **பி.வா.சா.ஆ. 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.12.2022 தேதியிட்ட அப்துல் வாஹீப் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்துல் வாஹீப் பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.